Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 124/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | |
| பெயர். | - | மருதையன் | வட்டம் | - | |
| த/பெ. | | ஆறுமுகம் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசன்குப்பம் | வயது | - | |

17.10.2025

2, 4 எதிரிகள் ஆஜரில்லை. 2, 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. சாட்சி மனுவின் மீது அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செயயப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. இந்த வழக்கின் நேர்எதிர் வழக்கின் நானும், எனது மனைவியும், மகனும் இந்த நீதிமன்றத்திற்கு எதிரிகளாக வந்தோம் என்றால் சரிதான். எனது கோழி பண்ணை ரோட்டில் உள்ளதா என்றால் இல்லை, உள்ளே வர வேண்டும். ரோடை ஒட்டி எனது நிலம் தான் உள்ளது. நான் எத்தனை நாய்கள் வைத்துள்ளேன் என்றால் 5 நாய்கள் வைத்துள்ளேன். அந்த பக்கம் யார் போனாலும் குரைக்குமா என்றால் ஆமாம், ஆனால் கடிக்காது, கார் வரும் சத்தம் கேட்டாலே அது குரைக்கும்.

2. அது மாதிரி நாய் ரோட்டில் வந்து ஏன் குரைக்கிறது , கட்டி போட்டு வைக்க வேண்டியது தானே என்று ராமநாதனும், நரசிம்மனும் வந்து கேட்டார்கள் என்றால் ஆமாம். அவர்கள் மீண்டும் திரும்பி வரும் போது மறுபடியும் நாய் குரைத்ததால் அவர்கள் இதுகுறித்து என்னிடம் கேட்டதற்கு நான் நரசிம்மனை அனுப்பிவிட்டு, ராமநாதனை மன்னிப்பு கேட்டால் தான் விடுவேன் என்று உட்கார வைத்துவிட்டேன் என்றால் ஆமாம்.

3. இதனால் நரசிம்மன் ஊரில் சென்று ஆட்களை கூப்பிட்டு வந்து ஏன் இவ்வாறு நாயை குரைக்க வைக்கிறார், ராமநாதனை ஏன் உட்கார வைத்திருக்கிறாய் என்று கேட்டதற்கு, நானும், எனது மனைவியும், மகனும் சேர்ந்து அவர்களை அடித்துவிட்டோம் என்றால் இல்லை, கார்த்தி என்பவர் தலைமையில் பஞ்சாயத்துகாரர்கள் வந்தார்கள்.

4. பட்டியல் சாட்சி 4 முதல் 9 வரையிலானவர்களுக்கு சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் இல்லை என்றால் சரிதான், அவர்கள் வீடு ஊரில் உள்ளது, அவர்கள் எனக்கு சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். மருத்துமனைக்கு 05.00 மணிக்கு சென்றேன், எனது மனைவியை தடியால் அடித்ததில் விழுப்புரத்தில் முத்தையா டாக்டரிடம் சென்று அட்மிஸன் போட்டேன். எனது மனைவியை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, மறுநாள் தான் நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஆமாம்.

5. மறுநாள், மருத்துமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் திருக்கோவிலூர் மருத்துவமனையில் 3 மணி நேரம் என்னை அங்கேயே உட்கார வைத்துவிட்டார்கள். மருத்துவரிடம் சண்டை எங்கு நடந்தது என்ற விவரம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 3 மணி நேரம் கழித்து எனது மனைவியை பார்க்க மருத்துமனைக்கு சென்றுவிட்டேனா என்றால் ஆமாம், முத்தையா மருத்துமனையில் எனது மனைவி 3 நாள் சிகிச்சையில் இருந்தார்.

6. எனது மகனை விசாரித்ததோடு சரி, என்னையும் எனது மனைவியையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது மகனை என்றைக்கு விசாரித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சேர்ந்ததே வழக்கு போடுவதற்காக தான் சேர்ந்தேன் என்றாலும், எனக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றால் ஆமாம், உள்காயம் தான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தான் பொய் புகார் கொடுத்துள்ளேன், நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் நான் பொய் சாட்சி சொல்லவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.